# சமூகம் மற்றும் குறிவைத்துத் தாக்குதல் தடுப்பு (நீதி மற்றும் நஷ்டஈடு கிடைக்க வகை செய்யும்) மசோதா ஏன் எதிர்க்கப்பட வேண்டும்?

**அருண் ஜெட்லி**
**எதிர்க்கட்சித் தலைவர் (மாநிலங்களவை)**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சமூகம் மற்றும் குறிவைத்துத் தாக்குதல் தடுப்பு (நீதி மற்றும் நஷ்டஈடு கிடைக்க வகை செய்யும்) மசோதா தொடர்பாக சோனியா காந்தி தலைமையிலான தேசிய ஆலோசனை கவுன்சில் ஒரு வரைவு மசோதாவை முன்வைத்தது. இந்த வரைவு மசோதா, விவாதத்துக்காக இணையத்தில் ஏற்றப்பட்டது. 'சட்டம், ஒழுங்கு' மற்றும் 'பொது ஒழுங்கு' என்பது மாநில விவகாரங்கள் என்றும், இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவது மாநில அரசுகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான முயற்சி என்றும் அடிமட்டத்தில் உள்ள மற்றவர்கள் மத்தியில் கடுமையான விமர்சனம் முன்வைக்கப்படுவதாக நான் எழுதியிருந்தேன். பிறப்பின் அடிப்படையில் பெரும்பான்மை, சிறுபான்மை என்று பிரித்துப் பார்ப்பதால் இந்த மசோதா மிகவும் பாரபட்சமாக உள்ளது. இதனால் மதத்தின் அடிப்படையில் ஒரு சமூகத்துக்கு ஆதரவாகவும் மற்றவருக்கு எதிராகவும் செயல்படுவதற்கு ஆட்சியாளர்களுக்கு வழிவகை ஏற்படுகிறது. 2011ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்பு கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொண்ட முதல்வர்கள், அரசியல் சட்டத்தின் கூட்டாட்சித் தத்துவத்தை நாசமாக்கும் விதத்தில், இந்த மசோதா இருப்பதாக கூறி, கட்சி சார்பின்றி எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

இந்த மசோதாவின் திருத்தியமைக்கப்பட்ட வடிவத்துடன் ஒரு கடிதத்தையும் இணைத்து உள்துறை அமைச்சகம் அனைத்து மாநில அரசுகளுக்கும் அனுப்பியிருப்பது, மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, சமூக அடிப்படையில் நாட்டைப்

பிளவுபடுத்தவுள்ளதோ என்று தோன்றுகிறது. பங்குதாரர்களுடன் இதுவரையில் போதுமான விவாதம் நடைபெறவில்லை.

நேற்று 2013 டிசம்பர் 2ஆம் தேதி அன்று, தமிழக முதல்வர் டாக்டர்.ஜெ.ஜெயலலிதா இது தொடர்பாக பிரதமருக்கு ஒரு நீண்ட கடிதத்தின் மூலமாக தனது வலுவான எதிர்ப்பைப் பதிவு செய்தார். நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரை முன்னிட்டு, அரசு கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்தில் அ.இ.அ.தி.மு.க. தலைவர்கள் இதைச் சுட்டிக்காட்டினார்கள். இந்த மசோதா தொடர்பாக தனது எதிர்ப்பை தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார். 'சட்டம் ஒழுங்கு', 'பொது ஒழுங்கு' ஆகிய மாநில விவகாரங்கள் உட்பட மசோதாவில் இடம்பெற்றுள்ள பல்வேறு அம்சங்கள், அரசியல் சட்டத்தின் கூட்டாட்சி முறைக்கு எதிராக உள்ளது என்பது கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் மசோதாவின் பல்வேறு அம்சங்கள் தெளிவற்றதாகவும், பெரும் தவறாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். முந்தைய மசோதாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நன்றாக ஒப்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், மிகவும் ஆட்சேபக்கரமாக உள்ளதாகவும் அவர் நம்புகிறார். "மோசமான சூழல்' என்ற வார்த்தைகள், "அச்சுறுத்தல் நிறைந்த, மோசமான சூழல்" என்று வர்ணிக்கப்படலாம் என்று அவர் வலியுறுத்துகிறார். இது வெவ்வேறு விளக்கங்களுக்குத் தானாகவே ஆளாகலாம். இந்த மசோதாவின் மூலம் மக்கள் பணியாளர்களும் குறிவைக்கப்படும் அபாயம் உள்ளதாகவும், வகுப்புவாத உணர்ச்சி சூழலில் பற்று கொள்ளும் போது, அவர்கள் செயல்படுவது சாத்தியமற்றதாகிவிடும் என்றும் அவர் கூறியுள்ளார். இந்த புதிய மசோதாக்களின் கீழ் அதிகாரிகளுக்கு மாநிலங்களின் செயல்பாடுகளில் தலையிடும் அதிகாரம் வழங்கப்படுவதால், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் மீதான மதிப்பீடு குறையும் வாய்ப்புள்ளது. இதைக் கூறிய அவர் "எப்படியிருந்தாலும், இந்திய அரசு தொடர்ச்சியாக தவறான ஆலோசனைகள், உற்பத்திக்கு எதிர்ப்பு ஒருதலைபட்சமான நடவடிக்கைகளில்

ஈடுபடுவதோடு மாநில உரிமைகளுக்கான அரசியல் சட்டங்களை ஏய்க்கும் அதிகாரிகளையும் அமைப்புகளையும் மேலிருந்து கீழ் வரை உருவாக்கி வருகிறது”.

இந்த மசோதா இன்னும் பொது பார்வைக்கு வைக்கப்படாத போதும், தமிழ்நாடு முதலமைச்சர் அதுபற்றிய விவாதத்தை பொதுவெளியில் நடைபெற முதல் அடியை எடுத்து வைத்திருக்கிறார். அவருடைய பார்வைகள் சரியானதாகவும் நடைமுறைக்கேற்றதாகவும் மேலும் அரசியல் சட்டத்தின் படியான கூட்டாட்சி அமைப்புக்கு பொருத்தமாகவும் இருக்கிறது.